**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 23.09.2019–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : 22.09.2019 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இந்நகராட்சி வார்டு எண். 4–இல் உள்ள காந்தி சாலையில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் நிறைவு பெற்று, புதியதாக சாலைகள் அமைக்கப்பட உள்ளதால், இச்சாலையின் இடையே பொது மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள இரண்டு மின் கம்பம் எண். RM12/HT 357 மற்றும் RM12/HT 358 ஆகியவைகளை அகற்றி, சாலையின் ஓரமாக மாற்றி அமைக்கும் பணிக்கு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கேட்புத் தொகை ரூ. 101760/– செலுத்தவும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ1/1516/19)

**தீர்மானம் எண். 617**

அனுமதிக்கப்பட்டது.

(2) இந்நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதியில் கீழ்கண்டுள்ள விவரப்படிக்கான பணிகள் மேற்கொள்ள 31.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் பெயர் குடிநீர் வடிகால் நிதி | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1 | 4–ஆவது வார்டுக்குட்பட்ட சின்ன கடைவீதி மற்றும் காந்தி சாலையில் உப்புநீர் குழாய் அமைத்தல். | ரூ. 0.55 | 1) என். செல்லப்பன், இராசிபுரம் | 0.25 % | – |
| | | | 2) ஜே. ரவிச்சந்திரன், ஆர்.கவுண்டம்பாளையம் | - | 3.47 % |

பெறப்பட்ட பணிக்கு மதிப்பீட்டைவிட குறைவாக 0.25 % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு என். செல்லப்பன், இராசிபுரம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(1759/19/இ2)

**தீர்மானம் எண். 618**

அனுமதிக்கப்பட்டது.

(3) இந்நகராட்சிப் பகுதியில் தவணை முறையில் குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் மற்றும் அறிவிப்புகள் கீழ்கண்ட எண்ணிக்கையில் அச்சிட்டு வழங்கும் பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | விவரம் | தேவைப்படும் எண்ணிக்கை | கார்த்திக் கார்ட்ஸ், இராசிபுரம் (ஒன்றின் விலை) ரூ. | சித்ரா பிரஸ், இராசிபுரம் (ஒன்றின் விலை) ரூ. | வெண்ணிலா இராசிபுரம் (ஒன்றின் விலை)ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | புதிய குடிநீர் இணைப்பு பெற தவணை கடிதம் | 6200 | 1.10 | 1.15 | 1.25 |
| 2 | புதிய குடிநீர் இணைப்பு விண்ணப்பம் | 6200 | 1.12 | 1.15 | 1.20 |
| 3 | பாதாள சாக்கடை இணைப்பு பெற விண்ணப்பம் | 15000 | 1.20 | 1.25 | 1.40 |
| 4 | புதிய குடிநீர் இணைப்பு பெற பொது மக்களுக்கு வழங்கும் துண்டு பிரசுரம் | 3000 | 1950 (3000 துண்டு பிரசுரங்களுக்கு) | 2000 (3000 துண்டு பிரசுரங்களுக்கு) | 2100 (3000 துண்டு பிரசுரங்களுக்கு) |
| 5 | பாதாள சாக்கடை இணைப்பு பெற பொது மக்களுக்கு வழங்கும் துண்டு பிரசுரம் | 15000 | 1.10 | 1.10 | 1.50 |

பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில் கார்த்திக் கார்ட்ஸ், இராசிபுரம் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், மேற்கண்ட பணிகளைச் செய்வதற்கு செலவினம் ரூ. 65000/—க்கு குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணியினை செய்தமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(இ2/218/18)

**தீர்மானம் எண். 619**

அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையத்தில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினை ஸ்டேன்லி ஹைடெக் கன்ஸ்ட்ரக்ஷன் லிமிடெட் நிறுவனம் செய்துள்ளது. மேற்படி பணிக்காக அந்நிறுவனம் வைப்புத் தொகை ரூ. 260000/— (ரூ. 130000/— + 130000/— ) செலுத்தியுள்ளார்கள். பணிகள் முடிவுற்று மூன்றாண்டுகளுக்கு மேல் ஆவதால் இவ்வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி வைப்புத் தொகை ரூ. 260000/—ஐ ஸ்டேன்லி ஹைடெக் கன்ஸ்ட்ரக்ஷன் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/2165/19)

**தீர்மானம் எண். 620**

அனுமதிக்கப்பட்டது.

(5) நகராட்சிக்குச் சொந்தமான குறைந்த வருவாய் குடியிருப்புகளை தங்களுக்கு கிரையம் செய்து தரக் கோரி ஓய்வுபெற்ற பணியாளர்களான (1) திரு கே. சுப்பராயன், (2) திரு மு. அத்தியப்பன் மற்றும் (3) திருமதி எ. ரமாபாய் ஆகியோர்களை மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு நீதிப்பேராணை எண். 1018, 1019 மற்றும் 1020/2013 தொடரப்பட்டதில் 12.04.2019 அன்று தீர்ப்புரை வழங்கப்பட்டது. இந்நிலையில் நீதிமன்ற ஆணையினை மனுதாரர்களுக்கு சாதகமாக செயல்படுத்தாததனால் மனுதாரர்களின் சார்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப் போவதாக திரு நிக்ஸன், வழக்கறிஞர் முன்னறிவிப்பில் தெரிவித்துள்ளார். இந்நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் இவ்வழக்கு மீது அரசு கூடுதல் வழக்குறைஞரின் சட்டக் கருத்துரு பெற்று அனுப்ப தெரிவிக்கப்பட்டது. மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற அரசு வழக்கறிஞர் திரு எம். ஏழுமலை வழக்கு குறித்த சட்டக் கருத்துரு கோரப்பட்டதில் 10.09.2019 அன்று அரசு வழக்கறிஞர், திரு எம். ஏழுமலை (திரு பி.எஸ். சிவசண்முகசுந்தரம், சிறப்பு அரசு வழக்கறிஞர்) அவர்களின் சட்டக் கருத்துரு பெறப்பட்டுள்ளது. மேற்காணும் சட்டக் கருத்துருவிற்கு ரூ. 10000/– வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(அ2/282/13)

**தீர்மானம் எண். 621**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ. 55.42 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மற்றும் ரூ. 15.60 கோடியில் முடிவுற்ற குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகளால் சாலைகள் சேதமடைந்து பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. ஆகவே, தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–20– இன் கீழ் ரூ. 10.00 கோடி மதிப்பீட்டில் கீழ்கண்ட தார் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகளாக, மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலங்களுடன் அமைக்க நிர்வாக அனுமதி வேண்டி பிரேரணைகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடந்த 16.08.2019 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

| Sl. No. | Package No. | Description | Length of road in "m" | Average width | Estimate Cost in Rs. in Lakhs |
|---|---|---|---|---|---|
| | | **PACKAGE - 1** | | | |
| | P - I | **BT ROAD** | | | 200.00 |
| 1 | | V.Nagar Road No. 11 | 311.00 | 10.00 | |
| 2 | | TVS street | 333.00 | 9.50 | |
| 3 | | Housing Bard Road | 115.00 | 8.00 | |
| 4 | | V.O.C Nagar Road No. 6 | 289.00 | 8.00 | |
| | | **PACKAGE - 2** | | | |
| | P - II | **Paver block Road** | | | 200.00 |
| 5 | | Dasa Street | 260.00 | 6.30 | |
| 6 | | Velasamy Kovil Street | 191.00 | 6.00 | |
| 7 | | Ganapathi villas rice mill Street | 243.00 | 7.00 | |
| 8 | | Kunju mariyamman Kovil Street | 296.00 | 6.00 | |
| 9 | | Veeri Street | 130.00 | 6.00 | |
| | | **PACKAGE - 3** | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | **Paver block Road** | | | |
| 10 | P - III | Town Bank Street | 253.00 | 6.00 | 200.00 |
| 11 | | Thiyagarajasamy Kovil Street | 200.00 | 5.50 | |
| | | **BT Road** | | | |
| 12 | | V.Nagar Road No. 8 | 155.00 | 6.80 | |
| 13 | | V.Nagar Road No. 4 | 494.00 | 5.50 | |
| 14 | | Lakshmi Street | 172.00 | 5.20 | |
| | | **PACKAGE - 4** | | | |
| | | **BT Road** | | | |
| 15 | P- IV | V.Nagar Road No. 1 | 380.00 | 9.00 | 200.00 |
| 16 | | Khrishanan Street | 142.00 | 5.20 | |
| 17 | | North colony Street | 222.00 | 10.40 | |
| 18 | | Khrishanan lane | 60.00 | 6.50 | |
| 19 | | Patchi Street | 178.00 | 6.40 | |
| | | **PACKAGE - 5** | | | |
| | | **BT Road** | | | |
| 20 | P-V | V.Nagar road no 14 | 268.00 | 8.30 | 200.00 |
| | | **Paver block road** | | | |
| 21 | | Nallappa street | 80.00 | 8.20 | |
| 22 | | Vengadasamy street | 397.00 | 5.40 | |
| 22 | | Minor nanjappa steet | 95.00 | 7.80 | |
| 23 | | Kumarasamy street | 254.00 | 9.20 | |
| 24 | | Khrishnan koil street | 132.00 | 6.00 | |
| | | | | **Total :-** | **1000.00** |
| | | | | **Say Rupees in Crore** | **10.00** |

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17349/2019/இ3, நாள் 03.09.2019–இல் தெரிவித்துள்ளபடி கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை அனுமதித்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ரூ.கோடியில்)

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மானிய நிதி / நில அபிவிருத்திக் கட்டணம் | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|
| இராசிபுரம் நகராட்சி | 10.00 | 4.00 | 2.50 | 3.50 |

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட நிதி பங்கீட்டின் படி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/497/19)**

**தீர்மானம் எண். 622**

அனுமதிக்கப்பட்டது.

( 7 ) இராசிபுரம் நகராட்சிக்கு தினசரி குடிநீர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக இராசிபுரம்—எடப்பாடி கூட்டு குடிநீர் திட்டத்திலிருந்து பெறப்பட்டு வருகிறது. தலைமை குடிநீர் நிலையத்திலிருந்து இராசிபுரம் 59 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. தினசரி வரும் குடிநீரின் அளவு குறைவதால் கூடுதலாக Chlorination செய்ய சோடியம் ஹைபோ குளோரின் கலந்து Chlorination செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. தற்போது வ.ஊ.சி. நகர் மேல்நிலைத் தொட்டி 3 மேல்நிலைத் தொட்டிக்கும் ஒரு மோட்டார் மட்டும் வைத்து Chlorination செய்வதால் பழுது ஏற்பட்டால் உடனடியாக Chlorination செய்ய கூடுதல் மோட்டார் இல்லை. எனவே, புதியதாக ஒரு மோட்டார் (Standby) வாங்கிப் பொருத்தி பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் சீரான முறையில் வழங்க மோட்டார் வாங்க பொதுநிதி ரூ. 215000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) உத்தேச செலவினம் ரூ. 215000/—க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ2/2408/19)**

**தீர்மானம் எண். 623**

அனுமதிக்கப்பட்டது.

( 8 ) இராசிபுரம் நகராட்சிக்கு தினசரி குடிநீர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இராசிபுரம்—எடப்பாடி கூட்டு குடிநீர் திட்டத்திலிருந்து பெறப்பட்டு வருகிறது. இராசிபுரம் நகராட்சி 59 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள காவேரி ஆற்றிலிருந்து குடிநீர் பெறப்பட்டு 5 மேல்நிலைத் தொட்டியில் குடிநீர் ஏற்றப்பட்டு குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. தினசரி குடிநீர் விநியோகத்தில் Chlorination செய்ய சோடியம் ஹைபோ குளோரின் லிக்யூடு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் பழைய பேருந்து நிலையம் 10 லிட்டர் மேல்நிலைத் தொட்டிக்கு Chlorination செய்யும் மோட்டார் பழுதடைந்து Chlorination செய்ய முடியாமல் உள்ளது. பழுதடைந்த மோட்டர் நெம்பர் 1—ஐ பழுது நீக்கம் செய்ய உத்தேச செலவு ரூ. 1,20,000/—த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) உத்தேச செலவினம் ரூ. 1,20,000/—த்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ2/2409/19)**

**தீர்மானம் எண். 624**

அனுமதிக்கப்பட்டது.

(9) இராசிபுரம் நகராட்சியில் நகரமைப்புப் பிரிவிலுள்ள இராசிபுரம் டி.மு. கோர்ட் மற்றும் சப் கோர்ட், மாவட்ட நீதி மன்றங்கள், சென்னை உயர்நீதி மன்றத்திலுள்ள வழக்குகளுக்கு வழக்காடு கட்டணம் வழங்க உத்தேச செலவினமாக ரூ. 1,00,000/— (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது நிதியிலிருந்து செலவினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(எப்1/1665/19)

**தீர்மானம் எண். 625**

அனுமதிக்கப்பட்டது.

(10) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டம்பர் பிளேசர் லாரி TN 28 AT 8969–இன் தகுதிச்சான்று மற்றும் பழுதுகள் நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த 12.09.2019 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் ரூ. | J.V.K. மோட்டார் ஒர்கஸ், சேலம் ரூ. |
|---|---|---|---|
| 1 | வர்ணம் பூசுதல் மற்றும் ஸ்டிக்கர் ஒட்டுதல் | 19500/– | 21000/– |
| 2 | ஆயில் சர்வீஸ் செய்தல் (நீங்கலாக) | 4500/– | 5100/– |
| 3 | ஆயில் பில்டர் மற்றும் டீசல் பில்டர் மாற்றுதல் | 3500/– | 4100/– |
| 4 | நான்கு வீல் பிரேக் லைனிங் புதியதாக மாற்றுதல் | 7500/– | 8100/– |
| 5 | நான்கு வீல் கிரீஸ் மாற்றுதல் மற்றும் எலக்ட்ரிக்கல் செக்கப் FC கண்டிஷன் | 6665/– | 7000/– |
| 6 | 4 ஸ்பிரிங் கட் புஸ் மாற்றுதல் | 21600/– | 22000/– |
| 7 | கிளட்ச் மேல் கிட் சிலிண்டருடன் மாற்றுதல் | 6500/– | 7000/– |
| 8 | ஓட்டுநர் சீட் நடத்துநர் சீட் புதியதாக மாற்றுதல் | 4500/– | 4900/– |
| 9 | சைடு பம்பர் புதியதாக வைத்தல் | 7600/– | 8000/– |
| 10 | ஹெட் வால்வு செக் செய்தல் | 9500/– | 10000/– |
| 11 | ரேடியேட்டர் கூல் & ஆயில் மாற்றுதல் (நீங்கலாக) | 4500/– | 5100/– |
| 12 | 4 வீல் பேரிங் செக் செய்தல் | 3500/– | 4000/– |
| 13 | ஏர் பில்டர் மற்றும் முகப்பு புதியதாக மாற்றுதல் மற்றும் சிறு பழுதுகளை நீக்குதல் | 3000/– | 3600/– |
| 14 | ஸ்பீடு கவர்னர் புதுப்பிக்கவும் | 900/– | 1100/– |
| 15 | ரைட், லெப்ட் டோர் லாக் புதியதாக மாற்றுதல் | 1200/– | 1350/– |
| | மொத்தம் :- | 104465/– | 112350/– |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரரால் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால் அதன் ஒப்பந்ததாரர் M/s. லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்திற்கு பணியாணை வழங்க நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/2131/19)

**தீர்மானம் எண். 626**

அனுமதிக்கப்பட்டது.

(11) இந்நகராட்சிக்குட்பட்ட சமுதாய கழிப்பிடம், பொதுக்கழிப்பிடம் மற்றும் பள்ளி கழிப்பிடங்களை சுத்தமாக பராமரிக்கவும், 01.11.2019 முதல் 31.10.2020 வரை ஓராண்டிற்கு பராமரிக்கும் பணிக்கு 18.09.2019 அன்று மூன்ற விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு கழிப்பிடத்திற்கு கட்டணம் ரூ. |
|---|---|---|
| 1) | இந்தியன் பூமி பார்யாவரன் சான்ஸ்தான், சிதம்பரம் –608001 | 7000/– |
| 2) | ராயல் இன்ஸ்டிடியூட் ஆப் சேனிடேசன், வேலூர் – 632 006 | 6500/– |
| 3) | சுபம் கங்கா சேவா சான்ஸ்தான், பெங்களூரு – 560 036 | 6000/– |

வ.எண். 3–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், M/s. சுபம் கங்கா சேவா சான்ஸ்தான், பெங்களூரு – 560 036 என்ற நிறுவனத்திற்கு கட்டணம் எதுவும் வசூலிக்காமல் மாதாந்திர கட்டணத்தில் தொண்டு நிறுவனம் மூலம் பராமரிப்பு செய்ய பணியாணை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) சமுதாய கழிப்பிடம் மற்றும் பொதுக் கழிப்பிடங்களை பராமரிப்பு செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்தும், அரசு மற்றும் நகராட்சி பள்ளி கழிப்பிடங்களை நகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினங்களை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) இப்பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/535/18)

**தீர்மானம் எண். 627**

அனுமதிக்கப்பட்டது.

(12) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் டிப்பர் லாரி TN 28 AS 0104–இன் தகுதிச்சான்று மற்றும் பழுது பார்க்கும் பணிக்கு கடந்த 12.09.2019 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | வாகன பழுதுகள் விவரம் | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் ரூ. | J.V.K. ஆட்டோ டீசல் ஒர்கஸ், சேலம் ரூ. |
|---|---|---|---|
| 1 | லாரிக்கு வர்ணம் பூசுதல், வாசகம் எழுதுதல் மற்றும் ஸ்டிக்கர் ஒட்டுதல். | 19500/– | 20600/– |
| 2 | ரைட், லெப்ட் சைடு பம்பர் அமைத்தல் மற்றும் ஸ்பிரிங் கட் ரீகேம்பரரிங் | 22650/– | 24000/– |
| 3 | எலக்ட்ரிக்கல் செக்கப் செய்து அனைத்து லைட் சரி செய்தல் | 4500/– | 5100/– |
| 4 | இன்ஜின் ஆயில் மாற்றுதல், ஆயில் பில்டர் மற்றும் டீசல் பில்டர் மாற்றுதல் | 4500/– | 5200/– |
| 5 | கீர் சரிவர போட முடியவில்லை சரி செய்தல் | 11215/– | 12000/– |
| 6 | ஹைட்ராலிக் டியூப் லீக் சரி செய்து ஆயில் மாற்றுதல் | 5100/– | 6500/– |

| | | | |
|---|---|---|---|
| 7 | கிளட்ச் பிளேட் அசம்பளி புதியது மாற்றுதல் மற்றும் ஓவர் ஆயில் சர்வீஸ் | 16500/– | 17500/– |
| 8 | 4 வீல் கிரீஸ் மாற்றி பிரேக் செக்கப் | 10500/– | 18000/– |
| | **மொத்தம் :-** | **94465/–** | **108900/–** |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், அதன் ஒப்பந்ததாரர் M/s. லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்திற்கு பணியாணை வழங்க நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/2112/19)

**தீர்மானம் எண். 628**

அனுமதிக்கப்பட்டது.

**( 13 )** இந்நகராட்சிப் பகுதியிலுள்ள வேலா பூங்காவில், இராசிபுரம் சட்ட மன்ற உறுப்பினர் நிதியில் கட்டப்பட்ட வேலா பூங்கா மற்றும் செம்மலை தெரு அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட இரண்டு அங்கன்வாடி மையங்களிலும் குடிநீர் வசதிகள் இல்லை. மேலும், முன்புறமுள்ள சுற்றுச்சுவர் பழுதடைந்து போதுமான பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. இப்பணிகளை செய்து அங்கன்வாடி மையம் முன்புறம் தரையில் Paver Block அமைத்து, அங்கன்வாடி மையத்திற்கு வரும் குழந்தைகள் நலன் கருதி வசதிகள் செய்யவும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 500000/–த்தை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/2410/19)

**தீர்மானம் எண். 629**

அனுமதிக்கப்பட்டது.

**( 14 )** இராசிபுரம் நகராட்சி வி. நகர் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் கிழக்குப் பார்த்த இரண்டு தார்சுக் கட்டட வகுப்பறைகள் பழுதடைந்துள்ளதால் அதனை இடித்துத்தர பள்ளித் தலைமையாசிரியர் கோரியுள்ளார். மேற்படி கட்டடங்கள் இடிப்பது குறித்து சேலம் அரசு பொறியியல் கல்லூரியில் கட்டட உறுதி தன்மைச் சான்று பெற்ற பிறகு நடவடிக்கை எடுக்க இந்நகர் மன்ற தீர்மானம் எண். 578 நாள் 29.07.2019–இல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சேலம் அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் அவர்களிடம் உறுதி தன்மைச் சான்று கோரப்பட்டதில், 05.08.2019–ஆம் தேதி அரசு பொறியியல் கல்லூரி உதவி பேராசிரியர்கள் ஆய்வு செய்து சேலம் அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் அவர்களின் கடித ந.க.எண். GCE/CIVIL/SML/Consultancy/ 2019/C.308 நாள் 03.09.2019 ஆய்வறிக்கையில் மேற்படி கட்டடத்தில் Beam மற்றும் Roof Slab ஆகியவை மிகவும் பலமிழந்து (Low Strength) உள்ளதால் கட்டடத்தினை இடித்து புதியதாக கட்டடங்கள் கட்டலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பழுதடைந்த கட்டடங்களை இடித்து அப்புறப்படுத்தவும் அதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கலாம்.

(இ1/1697/19)

**தீர்மானம் எண். 630**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– மா. கணேசன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி